**GLOBAL CENTRE FOR MONITORING POLITICAL AND ECONOMIC CRIMES IN SRI LANKA**

**MEDIA RELEASE 04/20/2022**

இலங்கையில் அரசியல் மற்றும் பொருளாதார குற்றங்களை கண்காணிப்பதற்கும் தடுப்பதற்குமான உலகளாவிய மையம் இலங்கைக்கு வெளியே இயங்குகின்றது. அரசியல் மற்றும் பொருளாதார குற்றங்களில் ஈடுபட்டுள்ள அரசியல் உயர்மட்டத்தினரையும் அவர்களினது கூட்டாளிகளையும் தடுத்து நிறுத்துவதற்கான உலகளாவிய பிரச்சாரத்தை ஆரம்பிக்கின்றது. அவர்களில் சிலர் அரசியல் செல்வாக்கின் கீழ் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டவர்கள். மற்றும் கடுமையான குற்றங்களை செய்தும் ஜனாதிபதியால் சர்வதேச சட்டத்தின்படி மன்னிக்கபட்டவர்கள். இலங்கையில் பல தசாப்தங்களாக இடம்பெற்று வரும் மனித உருமை மீறல்களையும் நாம் கவனிக்கின்றோம். மிக சமீபத்திய சம்பவம் எதிர்ப்பாளரிற்கு எதிராக காவல்துறையால் பயன்படுத்தப்பட்ட  முறையற்ற வன்முறையாகும். இதன் விளைவாக குறைந்தது ஒரு மரணம் ஏற்பட்டது. இதற்கு குற்றவாளிகள் இன்னமும் பொறுப்பு கூறவில்லை.

இந்த நடவடிக்கையில் அமெரிக்க, ஐரோப்பா ஒன்றியம், ஆப்பிரிக்க ஒன்றியம்,ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவூதிஅரேபியா, அவுஸ்ரேலியா, அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலகெங்கிலுமுள்ள பிற சர்வதேச அமைப்புகளின் ஒத்துழைப்பும் உள்ளடக்கியுள்ளது.

இந்த நடவடிக்கையை வெற்றியடை செய்வதற்காக இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார குற்றங்களை கண்காணிப்பதற்கும் தடுப்பதற்குமான உலகளாவிய மையம் மேற்கண்ட நிதி, அரசியல், மற்றும் பிற குற்றங்கள் பற்றிய தகவல்களின் உண்மை தன்மையை வழக்கறிஞர்களால் சரிபார்த்த பிறகு பயன்படுத்தப்படும்.

Im Hofteich 31,76703, Kraichtal.Germany | Phone - +49 15122335648 | Email - infor@justiceforsl.org | Web - www.justiceforsl.org

justiceforsl justiceforsl justicesl.lk

இலங்கையில் நீதி நிர்வாகத்தை அரசியல் மயமாக்கியதால் நாட்டின் பொதுப்பணத்தை கடுமையாக துர்ப்பிரயோகம் செய்துள்ளது. வெளிநாட்டு கடனைக்கூட உயர்மட்ட அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது கூட்டாளிகள் ஏமாற்றியதால் இன்று அதன் பண மதிப்பை விட நான்கு மடங்கு கடனில் தவிக்கின்றது.

அரச அதிகாரத்தை பயன்படுத்தி பொது நிதியை அபகரித்தவர்கள் கடன்களையும் முறைகேடாக பயன்படுத்தியுள்ளனர். இந்த பொதுப்பணமும் கடன் மோசடியும் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது. இந்த நிதி குற்றங்களிற்கு அரசியல் ரீதியாக வழக்கு தொடர சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அரசாங்கங்களின் மாற்றத்தின்போது நீதிதுறை மற்றும் புலனாய்வு அமைப்புகளின் மீது அழுத்தங்கள் காரணமாக பொறுப்பானவர்கள் விடுவிக்கப்பட்டனர். இந்த நபர்கள் தங்கள் மோசடி சொத்துக்களை வெளி நாடுகளில் முதலீடு செய்துள்ளனர். மக்களின் எழுச்சியை எதிர்கொள்ள முடியாமல் அந்த நாடுகளிற்கு தப்பி செல்ல தயாராகி வருகின்றனர். இதே வேளை இந்த மேல்தட்டு அரசியல்வாதிகளிற்கு நெருக்கமான வர்த்தகர்களும் இந்த மோசடிகளில் ஈடுபட்டுள்ளதுடன் இதுவரை பொறுப்பிலிருந்து விலகியுள்ளனர்.

அரசியல்வாதிகள்,அதிகாரவர்க்கத்தினர்,மதத்தலைவர்கள் என்று அழைக்கபடுகின்றவர்கள் மற்றும் வணிகர்கள் கொலைகள் உட்பட பல கடுமையான குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர். அதேசமயம் பொறுப்பின் அலட்சியத்தால் ஏராளமான குற்றங்கள் இழைக்கப்பட்டாலும் அதற்கு காரணமானவர்கள் இன்னும் தலைமறைவாகவே உள்ளனர். நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக இந்த அரசியல்வாதிகளும் அவர்களது கூட்டாளிகளும் இலங்கையில் உள்ள சட்டத்திலிருந்து விடுபடுவதற்காக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

எழுபத்திநாலு ஆண்டுகளாக நீதியை நிலைநாட்ட தவறிய அரசியல் மற்றும் பொருளாதார குற்றங்களை செயல்படுத்துவது காலத்தின் தேவையாகிவிட்டது. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள தொழில் வல்லுனர்கள் குழுவொன்று இதற்காக வெளிநாடுகளில் இருந்து பணிபுரிந்து வருகின்றது.

சுபாசின் வபலர
நிர்வாக இயக்குனர்
இலங்கையில் அரசியல் கண்காணிப்பிற்கும்
பொருளாதார குற்றங்களிற்குமான மையம்.
ஜெர்மனி